மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நிதித்துறையின் பரிசீலனையில் இப்போது இருக்கிறது அது வந்தவுடன் கல்வித்துறை உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாஞ்சோலை எஸ்டேட்டில் இருக்கும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் அங்கே தனியாக வீடுகட்ட வாய்ப்பு இல்லை. காரணம் பம்பாய்-பர்மா டிரேடிங் கார்ப்பரேஷனிடத்தின் நிலம்தான் இருக்கிறது. தனியாக நிலம் இல்லை. அந்தக் கம்பெனி விரும்பினால்தான் ஏதாவது வீடு கொடுப்பார்கள். அப்பொழுது தங்க முடியும்: இல்லையென்றால் தங்கவே முடியாது. பக்கத்தில் கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர், 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் கல்லிடைக்குறிச்சி ஊர் இருக்கிறது. அவர்கள் கேட்பது நியாய மான கோரிக்கை. இந்த இடத்தைவிட உயரம் குறைவாக உள்ள மற்ற சில இடங்களில்கூட இந்த அலவன்ஸ் கொடுக்கப் படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே கூடிய விரைவில் இங்கே அந்த ஹில் அலவன்ஸ் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது மாஞ்சோலை எஸ்டேட் பயணப்படி வழங்குவதற்காக மலை வாசஸ்தலம் என்று குறிப்பிடப்படுகிறது. ஹில் அலவன்ஸ் கொடுப்பதற்காக குறிப்பிடப்படவில்லை. அதைத் தான் அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. பரிசீலனை முடிந்த உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

பட்டம் பெற்ற சிறைக் கைதிகளுக்கு விடுதலைக்குப் பிறகு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கும் திட்டம்.

*வினா எண். 557—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள மத்திய சிறைச்சாலையில் தண்டனை பெற்ற கைதிகள் தண்டனை காலத்தில் படித்து பட்டம் பெற்ற வர்களுக்கு விடுதலைக்குப் பிறகு அவர்களை அரசு பணிகளில் சேர்ப்பதற்கு அரசு முன் உரிமை வழங்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தகுதியின் அடிப்படை யில் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுதியின் அடிப் படையில் என்று கூறி இருக்கிறார்கள். அந்தத் தகுதியின் அடிப் படை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அரசு ஆணை ஒன்று இருக் கின்றது.

தண்டனை பெற்றதைத் தவிர்த்து அரசுப் பணியில் அமர்த் துவதற்கான மற்ற தகுதிகளை முன்னாள் கைதி ஒருவர் பெற் றிருந்தால், அவர் புரிந்த குற்றத்தையும் அதன் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு, விதிமுறைகளைத் தளர்த்தி அவர்களை வேலையிலே அமர்த்தலாம் என்று இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் வன்முறை மற்றும் ஒழுக்கக்கேடு நிலையில் குற்றங் களைச் செய்து அவர்கள் தண்டனை பெற்றிருந்தால் அரசுப்பணியில் அவர்களைச் சேர்க்கக்கூடாது என்று இருக்கிறது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அந்தத் தகுதியின் அடிப்படையில் எத்தனை பேர்கள் வேலை வேண்டும் என்று அரசுக்கு மனுச்செய்துள்ளனர். எத்தனை பேர்களுக்கு வேலை தரப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுக்கள் எத்தனை பேர்களிடமிருந்து வந்தது என்ற தகவல் இல்லை. ஆனால் 19 பேர்களுக்கு வேலை தரப்பட்டிருக்கின்றது. அரசு மூலமாக அவர்களுக்குத் தருவதைவிட செல்ப் எம்ப்ளாய்மெண்ட் ஆக சுய வேலை வாய்ப்பு அவர்களுக்குத் தர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு செ. சிவசாமி : தலைவர் அவர்களே, மாணவர்கள் கைதானால் அவர்கள் படிப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சல் மூலம் படிப்பதற்கான வழிவகை ஏற்கனவே இருக்கின்றது.

பர்மா தமிழர்காளல் நடத்தப்பட்ட திருவள்ளுவர் கூட்டுறவு அச்சகம்.

*வினா எண். 558—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—